**இனிமையான குழந்தைகளே! இப்போது உங்களது அனைத்து ஆசைகளும் பூர்த்தி ஆகின்றன, வயிறு நிரம்பி விடுகிறது, பாபா உங்களை திருப்தியான ஆத்மாவாக ஆக்குவதற்காக வந்துள்ளார்.**

கேள்வி: இப்போது குழந்தைகளாகிய நீங்கள் பக்தி செய்வதில்லை, ஆனாலும் அவசியம் பக்தர்களாக உள்ளீர்கள் - எப்படி?

பதில்: எதுவரை தேக அபிமானம் உள்ளதோ அது வரை பக்தர்களாக இருக்கிறீர்கள், நீங்கள் ஞானி ஆவதற்காகப் படித்துக் கொண்டிக்கிறீர்கள். எப்போது பரீட்சையில் தேர்ச்சியடைந்து கர்மாதீத் நிலை அடைகிறீர்களோ அப்போது சம்பூர்ண (முழுமையான) ஞானி என்று சொல்ல லாம், பிறகு படிக்க வேண்டிய அவசியம் இருக்காது.

ஓம் சாந்தி! பக்தர் மற்றும் பகவான் இரண்டு பொருட்கள் உள்ளன அல்லவா! குழந்தைகள் மற்றும் தந்தை, பக்தர்கள் அநேகம் பேர் பகவான் ஒருவர் தான். குழந்தைகளாகிய உங்களுக்கு மிக சகஜமான விஷய மாக உள்ளது. ஆத்மாக்கள் சரீரத்தின் மூலமாக பக்தி செய்கின்றன, ஏன்? பகவானாகிய தந்தையை சந்திப்பதற்காக! நீங்கள் பக்தர்கள் இப்போது நாடகத்தைப் புரிந்து கொண்டு விட்டீர்கள். எப்போது முழு ஞானி ஆகிறீர்களோ அப்போது இங்கு இருக்க மாட்டீர்கள். பள்ளியில் படிக்கிறார்கள், பரீட்சையில் தேர்ச்சி அடைந்த பிறகு, அடுத்த வகுப்பிற்குச் செல்வார்கள். இப்போது உங்களுக்கு பகவான் கற்பிக்கின்றார். ஞானிக்கு கல்வியின் அவசிய மில்லை. பக்தர்களுக்கு பகவான் கற்பித்துக்கொண்டுள்ளார். உங்களுக்குத் தெரியும் நாம் ஆத்மாக்கள் பக்தி செய்து கொண்டு இருந்தோம். இப்போது பக்தியிலிருந்து விடுபட்டு ஞானத் திற்கு எப்படிச்செல்வது - இதை தந்தை கற்றுக் கொடுக்கின்றார். இப்போது பக்தி செய்வ தில்லை, ஆனால் தேக அபிமானத்தில் வருகிறீர்கள் அல்லவா? இதையும் நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள் அந்த பக்தர்கள் பகவானையே தெரிந்து கொள்ளவில்லை என்று. எங்களுக்குத் தெரியாது என்று தாங்களே கூறிக்கொள்கிறார்கள். யார் முதல் நம்பர் பக்தரோ, அவரிடமே தந்தை கேட்கிறார், நீங்கள் எந்த பகவானுடைய பக்தராக இருந்தீர்கள், அது உங்களுக்குத் தெரியுமா? உண்மையில், பகவானும் ஒருவராகத் தான் இருக்க வேண்டும். இங்கோ அநேக பகவான்கள் ஆகிவிட்டனர். தன்னை பகவான் என்று சொல்கின்றனர். இதற்குத் தான் அஞ்ஞானம் (அறியாமை) என்று சொல்லப்படுகிறது. பக்தியில் கும்மிருட்டாக உள்ளது. அது தான் பக்தி மார்க்கம். பக்தர்கள் பாடுகின்றனர், ஞான மையை சத்குரு வழங்கினார், அஞ்ஞான இருள் நீங்கியது என்று. ஞான மையை குருமார்கள் கொடுக்க முடியாது. குருவோ அநேகம் பேர். குழந்தைகள் நீங்கள் அறிவீர்கள், பக்தியில் என்னவெல்லாம் செய்தோம், யாரை நினைவு செய்தோம், யாரை பூஜித்தோம், என்று அந்த பக்தியின் இருள் இப்போது உங்களிடமிருந்து நீங்கி விட்டது, ஏனெனில், தந்தையைத் தெரிந்து கொண்டீர்கள். தந்தையும் அறிமுகம் கொடுக்கிறார் - மிக இனிமையான குழந்தைகளே!, நீங்கள் ஆத்மாக்கள், இந்த சரீரத்துடன் நடிப்பை நடிக்கிறீர்கள். உங்களுடையது எல்லையற்ற ஞானம். எல்லையற்ற நடிப்பை நடித்துக்கொண்டே யிருக்கிறீர்கள். நீங்கள் எல்லைக்குட்பட்டதிலிருந்து விலகி இப்போது எல்லையற்றதிற்குச் சென்று விட்டீர்கள். இவ்வுலகமும் அதிகரித்து அதிகரித்து எவ்வளவு எல்லையற்றதில் சென்றுவிட்டது. பிறகு அவசியம்

எல்லைக்குட்பட்டதில் வந்துவிடும்,

எல்லைக்குட்பட்டதிலிருந்து எல்லையற்றதிற்கும், எல்லையற்றதிலிருந்து எல்லைக்குட்பட்ட திற்கும் எப்படி வருகிறோம் என்பது இப்பொழுது குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரிகிறது. ஆத்மா சிறிய நட்சத்திரம் போன்றது, இவ்வளவு தெரிந்துள்ளது, இருந்தும் இவ்வளவு பெரிய -ங்கம் செய்கின்றனர். அவர்களும் என்ன செய்ய முடியும், ஏனெனில் சிறிய புள்ளியை பூஜை செய்ய முடியாது. இரு புருவமத்தியில் ஒளிர்விடும் நட்சத்திரம் என்று சொல்கின்றனர். இப்போது அந்த நட்சத்திரத்தை எப்படி பக்தி செய்வது? பகவானைப்பற்றி யாருக்கும் தெரிய வில்லை. ஆத்மாவைப்பற்றி தெரிகிறது, ஆத்மா இருபுருவ மத்தியில் உள்ளது, அவ்வளவுதான், ஆனால் ஆத்மா தான் சரீரம் எடுத்து நடிப்பை நடிக்கிறது என்பது புத்தியில் தெரிவதில்லை. முதன்

முதலில் நீங்கள் தான் பூஜை செய்தீர்கள், பெரிய பெரிய லிங்கம் செய்தீர்கள், இராவணனைக் கூட அனுதினமும் பெரிய உருவமாகச் செய்கிறார்கள், சிறிய இராவணனாகச் செய்வதில்லை, மனிதர்கள் கூட சிறியதாக, பிறகு பெரியதாக ஆகின்றனர், இராவணனை ஒருபோதும் சிறியதாகக் காண்பிப்பதில்லை. அவன் சிறியதாகவோ பெரியதாகவோ ஆவதில்லை, அவன் எந்த ஒரு ஸ்தூலமான பொருளும் அல்ல, இராவணனை 5 விகாரங்களுக்காக ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. ஐந்து விகாரங்கள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன, ஏனெனில், தமோபிர தானமாகிக் கொண்டே உள்ளனர். முன்னர், தேக அபிமானம் இந்த அளவு இருக்கவில்லை, பிறகு அதிகரித்துள்ளது. ஒருவரை பூஜை செய்தோம், பிறகு இன்னொருவரை பூஜை செய்தோம். அப்படி அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆத்மா தமோபிரதானம் (கீழ் நிலை) அடைகிறது. புத்தியில் சதோபிரதானம் (மேல்நிலை) நாம் எப்போது ஆகிறோம், பிறகு தமோபிரதானம் எப்போது ஆகிறோம்? என்னும் இந்த விஷயங்களை அறிந்த மனிதர் உலகில் எவருமே இல்லை. ஞானத்தில் எந்த ஒரு கஷ்டமும் கிடையாது, தந்தை வந்து மிகவும் சகஜமான ஞானம் சொல்கிறார், கற்பிக்கிறார். இருப்பினும் முழு படிப்பின் சாரமாக அமைகிறது - நாம் ஆத்மா, தந்தையின் குழந்தைகள், தந்தையை நினைவு செய்ய வேண்டும்.

இந்த பாடலும் உள்ளது - கோடியில் சிலர் அதிலும் ஒரு வெளிப்படுகின்றனர். கோடியில் சிலரே சரியான விதத்தில் தெரிந்துள்ளனர், யாரை? தந்தையை, சொல்வார்கள், தந்தை எப்போதாவது அப்படியிருக்கிறாரா என்ன? அவரவர் தந்தையை அனைவரும் தெரிந்துள்ளனர். இந்த தந்தையை ஏன் மறந்து விட்டனர்? இதன் பெயரே ஒளிந்து பிடித்து விளையாடும் (பூல் பூலையா) விளையாட்டு. ஒருவர் எல்லைக்குட்பட்ட தந்தை, மற்றொருவர் எல்லைக்கப்பாற் பட்ட தந்தை. இரண்டு தந்தையிடமிருந்தும் ஆஸ்தி கிடைக்கிறது, எல்லைக்குட்பட்ட தந்தை யிடமிருந்து சிறிது ஆஸ்தி கிடைக்கிறது. நாளுக்கு நாள் முழுவதும் சிறியதாக ஆகிவிடுகிறது. எதுவுமே இல்லாதது போல. எதுவரை எல்லையற்ற தந்தை வரவில்லையோ, அதுவரை வயிறு நிரம்புவதில்லை. வயிறு முழுவதும் காலியாகும்போது, தந்தை வந்து வயிற்றை நிரப்புகிறார், குழந்தைகளாகிய உங்களுக்கு ஏதேனும் பொறுத்துக்கொள்ளும் அவசியமே இல்லாத அளவிற்கு, ஒவ்வொரு விஷயத்திலும் வயிற்றை நிரப்பிவிடுகிறார், அனைத்து ஆசைகளையும் பூர்த்தி

செய்கிறார். திருப்தியான ஆத்மா ஆகிவிடுகிறது, எப்படி பிராமணர்களுக்கு உணவிடும் போது ஆத்மா திருப்தி ஆகிவிடுகிறது. இது எல்லைக்கப்பாற்பட்ட திருப்தி, எவ்வளவு வித்யாசம் பாருங்கள்! ஆத்மாவின் எல்லைக்குட்பட்ட திருப்தி மற்றும் எல்லைக்கப்பாற்பட்ட திருப்தி இவற்றில் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள். தந்தையை அறிந்து கொள்வதால் தான், திருப்தி ஏற்படுகிறது, ஏனெனில் தந்தை சொர்க்கத்திற்கு எஜமானன் ஆக்குகிறார். நீங்கள் அறிவீர்கள், நாம் எல்லையற்ற தந்தையின் குழந்தைகள், தந்தையைத்தான் அனைவரும் நினைவு செய்கிறார்கள் அல்லவா! ஆனாலும் சிலர் சொல்வர் இதுவோ இயற்கை யானது, நாம் பிரம்மத்தில் ஒன்றி விடுவோம் என்று. தந்தை கூறியுள்ளார், பிரம்மத்தில் யார் ஒருவரும் ஐக்கிய மாகி விட முடியாது. இது ஒரு முடிவில்லா நாடகம், சுற்றிக் கொண்டேயிருப்பது, இதில் குழம்புவதற்கு சிறிதும் அவசியமில்லை. நான்கு யுகங்களின் சக்கரம் சுற்றிக் கொண்டேயிருக்கும். அதே போன்று மீண்டும் நடக்கும். தந்தை ஒருவரே, உலகமும் ஒன்று தான். வெளி மனிதர் எவ்வளவு தலையை உடைத்துக் கொள்கின்றனர். சந்திரனில் உலகம், நட்சத்திரங்களிலும் உலகம் இருப்பதாக நினைக்கின்றனர். எவ்வளவு தேடுகின்றனர். சந்திரனில் பிளாட் (நிலம்) வாங்க நினைக்கின்றனர் - இது எப்படி நடக்கும்? யாருக்குப் பணம் கொடுப்பார்கள்? இதற்குத்தான் விஞ்ஞானத்தின் கர்வம் என சொல்லப்படுகிறது. மீதி வேறெது வுமில்லை. முயற்சி செய்து கொண்டேயிருக்கின்றனர். இது மாயையின் பகட்டு அல்லவா? சொர்க்கத்தை விட அதிக தோற்றம் (ஷோ) செய்து காண்பிக்கின்றனர். சொர்க்கத்தையோ மறந்தே விட்டனர், சொர்க்கத்தில் அளவில்லாத செல்வம் இருந்தது. ஒரு கோவிலில் இருந்து எவ்வளவு செல்வம் எடுத்துச் சென்றுவிட்டனர் பாருங்கள்! பாரதத்தில் தான் இவ்வளவு செல்வம் இருந்தது, கஜானா மிக நிரம்பியிருந்தது. முகம்மது கஜினி வந்தார், கொள்ளையடித்துச் சென்றார், அரைகல்பம் நீங்கள் சக்தி நிரம்பியவராக இருக்கிறீர்கள், திருட்டு போன்றவை பெயருக்குக் கூட இருப்பதில்லை. இராவண இராஜ்யமும் இல்லை. இராவண இராஜ்யம் துவங்கும் போது திருட்டு, சண்டை கலவரம் முதலியன ஆரம்பிக்கின்றன. இராவணனின் பெயர் சொல்லப்படுகிறது. மற்றபடி இராவணன் என்று ஒருவரும் இல்லை. விகாரங்களின் பிரவேசம் தான் இது. இராவணனுக்காக மனிதர் என்னவெல்லாம் செய்கிறார்கள்! எவ்வளவு கொண்டாடுகிறார்கள்! நீங்களும் தான் தசரா கொண்டாடினீர்கள். இராவணனை எப்படி எரிக்கிறார்கள் என்பதைப் பார்க்கச் சென்றீர்கள். பிறகு தங்கம் கொள்ளையடிக்கச் செல்கின்றனர். என்ன இது! மிகவும் அதிசயமாக உள்ளது! எப்படி ஆகிவிட்டோம்? எவ்வளவு பூஜையெல்லாம் செய்தோம்! ஏதாவது பண்டிகை என்றால், எப்படியெல்லாம் கொண்டாடிக் கொணடிருந்தோம்! பக்தி மார்க்கம் ஒரு பொம்மை விளையாட்டு போன்றது. அதுவும் எவ்வளவு சமயம் நடக்கிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். ஆரம்பத்தில் இவ்வளவு செய்து கொண்டிருக்கவில்லை. பிறகு மென்மேலும் அதிகரித்து, இப்போது என்ன நிலையாகிவிட்டது பாருங்கள்! இவ்வளவு செலவு செய்து சித்திரம் மற்றும் கோவில் ஆகியவை ஏன் உருவாக்குகிறார்கள்? இது பணத்தை வீணாக்குவதாகும். கோவில் ஆகியவை உருவாக்க இலட்சக்கணக்கான ரூபாய் செலவழிக் கின்றனர். தந்தை எத்தனை அன்புடன், அமரவைத்துப் புரிய வைக்கிறார். நான் உங்களுக்கு, (குழந்தைகளுக்கு) அளவிலா செல்வம் அளித்தேன், அவை அனைத்தையும் எங்கு இழந்தீர்கள்? இராவண இராஜ்யத்தில் நீங்கள் எதிலிருந்து எதுவாக

ஆகிவிட்டீர்கள். அப்படி, ஈஸ்வரனுடைய விதிப்படி ஒத்துப்போவது என்பது அல்ல. இது ஈஸ்வரனுடைய விதி அல்ல, மாயையின் விதியாகும். இப்போது உங்களுக்கு ஈஸ்வரனுடைய இராஜ்ய பாக்யம் கிடைக்கிறது. அங்கு துக்கத்தின் எந்த ஒரு விஷயமும் ஏற்படாது. ஈஸ்வரிய விதி மற்றும் அசுர விதியில் எவ்வளவு வித்தியாசம்! இந்த அறிவு உங்களுக்கு இப்போது கிடைக்கிறது. அதுவும் நம்பர் பிரகாரம் முயற்சியின்படி கிடைக்கிறது. ஞான ஊசி யாருக்கு இடப்படுகிறது, இதைப்புரிந்து கொள்ள முடியும். சிலருக்கு ஞான ஊசி நன்றாக ஏறுகிறது, சிலருக்கு குறைவாக ஏறுகிறது, சிலருக்கு ஊசி இறங்குவதே இல்லை. இதை பாபா தான் அறிவார் அல்லவா! சேவையில் தான் முழு ஆதாரமும் உள்ளது. சேவை மூலமாகத்தான் தந்தை சொல்வார் இன்னாருக்கு ஊசி இடப்பட வில்லை, முழுவதும் சேவை செய்வது பற்றி அறியவே இல்லை. சிலருக்கு அதிக ஊசி இடப்பட்டுள்ளது போல, சிலருக்கு முழுவதுமே போடாததுபோல, அப்படியும் உள்ளனர்.

ஞான மை சத்குரு கொடுத்தார், அஞ்ஞான இருள் அழிந்தது என்று கூறப்படுகிறது. பரமபிதா பரமாத்மா ஞானக்கடல், சுகக்கடல், ஆனால் அவரை கல், மண் இவற்றில் இருப்பதாகக் கூறிவிட்டனர். குழந்தைகளுக்கு எவ்வளவு நிச்சயம் இருக்க வேண்டும்! எல்லையற்ற தந்தை நமக்கு எல்லையற்ற சுகத்தைக் கொடுக்கிறார். எல்லையற்ற பாபா, நீங்கள் எப்போது வருகிறீர் களோ அப்போது நாங்கள் உங்களுடையவர் ஆகிவிடுவோம் என்று பாடுகின்றனர். உங்கள் வழிப்படியே நடப்போம் என்கின்றனர். பக்தியிலோ தந்தையை அறியாமலேயே உள்ளனர், இந்த பாகம் இப்போது தான் நடைபெறுகிறது. இப்போதுதான் தந்தை கற்பிக்கின்றார். இந்த கல்வி நடக்கும் பாகம் மீண்டும் 5000 வருடத்திற்குப் பின்னர் தான் நடைபெறும் என்பது உங்களுக்குத் தெரியும். தந்தை 5000 வருடம் கழித்து மீண்டும் வருவார். ஆத்மாக்கள் அனைவரும் சகோதர சகோதரர்கள், மீண்டும் சரீரத்தை எடுத்து, நடிப்பை நடிக்கின்றன. மனித சிருஷ்டி (உலகம்) கூட அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஆத்மாக்களுக்கும் ஸ்டாக் (மொத்த இருப்பு) உள்ளது அல்லவா? எந்த அளவு மனிதர்களின் ஸ்டாக் முழுமை யாகிறதோ அதே அளவு அங்கு ஆத்மாக்களின் ஸ்டாக் இருக்கும். நடிகர்களும் ஒன்று கூட குறைவாகவோ அதிகமாகவோ இருக்க மாட்டார்கள். இவர்கள் அனைவரும் எல்லையற்ற நடிகர்கள். இவர்களுக்கு அனாதி (முடிவில்லாத) நடிப்பு (பாகம்) கிடைக்கப்பெற்றுள்ளது. இது அதிசயமல்லவா! இப்போது குழந்தைகள் நீங்கள் எவ்வளவு புத்திசாலி ஆகிவிட்டீர்கள். இந்தப் படிப்பு எவ்வளவு உயர்ந்தது. உங்களுக்கு படிப்பிக்கின்றவர் சுயம் ஞானக்கடல் தந்தை ஆவார். மற்ற அனைவரும் பக்திக்கடல் ஆவர். எப்படி பக்திக்கு மதிப்பு உள்ளதோ, அப்படியே ஞானத்திற்கும் மதிப்பு உள்ளது. பக்தியில் எத்தனை மனிதர் ஈஸ்வரனுக்காக எத்தனை தானம், புண்ணிய காரியம் செய்கின்றனர், ஏனெனில் வேத, சாஸ்திரங்கள் இவைகளை அத்தனை பெரியதாகச் செய்கின்றனர்.

இப்போது குழந்தைகள் உங்களுக்கு பக்தி மற்றும் ஞானத்தின் வித்தியாசம் கிடைத்துள்ளது. எவ்வளவு விசாலமான புத்தி தேவை! உங்களுக்கு பார்வை ஒருபோதும் எவர் மீதும் செல்லாது. நீங்கள் சொல்வீர்களா, நாம் இந்த இராஜா, இராணி இவர்களைப் பார்க்க வேண்டும் என்று. அவர்களை ஏன் பார்க்க வேண்டும்? உள்ளத்தில் எந்த ஆசையும் ஏற்படுவதில்லை. இவையனைத்தும்

அழியப்போகின்றவை. யாரிடம் என்ன உள்ளதோ அவையனைத்தும் அழிய வேண்டியவை. வயிறு என்னவோ அதே இரண்டு ரொட்டி தான் விரும்புகிறது, ஆனால் அதற்காக எத்தனை பாவம் செய்கிறார்கள்! இச்சமயம், உலகில் பாவமே பாவமாக உள்ளது. வயிறு அதிக பாவம் செய்ய வைக்கிறது. ஒருவர் மற்றவர் மீது பொய்யான குற்றங்களைச் சுமத்துகிறார்கள். பணமும் அதிகமாக சம்பாதிக்கிறார்கள். எவ்வளவு பணம் மறைத்து வைக் கிறார்கள்! அரசாங்கமும் என்ன செய்ய முடிகிறது? ஆனால் யார் எவ்வளவு மறைத்தாலும், மறைத்து வைக்க முடியாது. இப்போது இயற்கையின் பேராபத்துகளும் வர இருக்கின்றன. மீதி சிறிது நேரமே உள்ளது. பாபா சொல்கிறார் - சரீர நிர்வாகத்திற்காக எது செய்ய வேண்டுமோ செய்யுங்கள், அதற்குத் தடையில்லை. குழந்தைகளுக்கு குஷி கரை கடந்து இருக்க வேண்டும். தந்தையும், ஆஸ்தியும் நினைவில் இருக்கட்டும். தந்தையோ முழு உலகிற்கும் உங்களை எஜமானனாக ஆக்குகிறார். பூமி, ஆகாயம் அனைத்தும் நமக்கு சொந்தமாகிறது. எல்லைக்குட் பட்டது எதுவுமே இருக்காது. குழந்தைகளுக்குத்தெரியும், நாம் தான் எஜமானனாக இருந்தோம் என்று. பாரதம் அழியாத கண்டம் என்று பாடப்பட்டுள்ளது. அதனால் குழந்தைகள் உங்களுக்கு மிகுந்த குஷி இருக்க வேண்டும். எல்லைக்குட்பட்ட படிப்பில் கூட குஷி ஏற்படுகிறது அல்லவா? இதுவோ எல்லையற்ற படிப்பு. எல்லையற்ற தந்தை கற்பிக்கின்றார். அப்படிப்பட்ட தந்தையை நினைவு செய்ய வேண்டும். குழந்தைகள் புரிந்து கொள்ள முடியும் - அந்த உடலுக்கான வேலைகளெல்லாம் ஒன்றுமேயில்லை. நாம் தந்தையிடமிருந்து என்ன ஆஸ்தி அடைகிறோம். எவ்வளவு இரவு பகல் வித்தியாசம் உள்ளது. நாமோ உடலுக்கான வேலை களை செய்து கொண்டே, அங்கு சென்று தலையில் கிரீடமுள்ளவர்களாக ஆகிவிடுவோம். தந்தை கற்பிக்க வந்துள்ளார் என்றால் குழந்தைகளுக்கு குஷி இருக்க வேண்டும். அந்த வேலை காரியங்களையும் செய்து கொண்டேயிருக்க வேண்டும். இதையும் புரிந்துகொள்கின்றனர், இது பழைய உலகம், இதன் அழிவிற்காக அனைத்து ஏற்பாடுகளும் நடந்து கொண்டுள்ளன. அது போன்ற காரியம் செய்கின்றனர் - எங்கு பெரிய சண்டை ஏற்பட்டுவிடுமோ என்ற பயமுண்டாகி விடுகிறது. இவை அனைத்தும் டிராமா படி நடந்தே தீரும். கடவுள் செய்கிறார் என்பதல்ல! நாடகத்தில் பதிவாகியுள்ளது. இன்றில்லையேல் நாளை வினாசம் நடந்தே தீரும். இப்போது நீங்கள் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்காக புதிய உலகம் அவசியம் தேவை. இந்த அனைத்து விஷயங்களையும் உள்ளுக்குள் சிந்தித்து குஷி ஏற்பட வேண்டும். பாபா இந்த இரதத்தை எடுத்துக் கொண்டார். இவருக்கென்று எதுவுமில்லை. அனைத்தையும் விட்டு விட்டார். எல்லையற்ற இராஜ்யம் கிடைக்கிறது, பின் இதை வைத்து என்ன செய்ய முடியும்? பாபாவுக்காக இந்தப் பாடல் செய்யப்பட்டது: அல்ஃப்க்கு அல்லா கிடைத்த பின் இந்த அற்பமானது எனன செய்ய முடியும்? கூடவோ, குறைத்தோ கொடுத்து ஒரேடியாக முடித்துவிட்டார். சரீரத்தைக் கூட பாபாவுக்கு கொடுத்துவிட்டார். ஆ ! நான் தான் உலகிற்கே எஜமானன் ஆகிறேன். அநேக முறை ஆகியிருக்கிறேன். எவ்வளவு சுலபமானது! நீங்கள் உங்கள் வீட்டில் இருந்து கொண்டே, உங்களை ஆத்மா என்று உணர்ந்து தந்தையை நினைவு செய்யுங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்,

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. வேறு எந்த ஒருவர் மீதும், கண் சென்று மூழ்காத அளவிற்கு, அப்படிப்பட்ட திருப்தியான, விசால புத்தியுடையவர் ஆக வேண்டும். உள்ளத்தில் எந்த ஆசையும் இருக்க வேண்டாம், ஏனெனில், இவையனைத்தும் அழியப் போகின்றவை.

2. சரீர நிர்வாகத்திற்காக காரியம் செய்யும் போதே, குஷியின் அளவு சதா ஏறிக்கொண்டே யிருக்கட்டும். தந்தை மற்றும் ஆஸ்தி நினைவில் இருக்கட்டும். புத்தி எல்லைக்குட் பட்டதிலிருந்து விலகி எல்லைக்கப்பாற்பட்டதில் இருக்கட்டும்.

வரதானம் : தீவிர முயற்சி மூலம் அனைத்து பந்தனங்களையும் கடந்து மனோரஞ்சனத்தை (மகிழ்ச்சி) அனுபவம் செய்யக்கூடிய டபுள் லைட் ஆகுக.

நான் சரியாகத் தான் இருக்கின்றேன், ஆனால், சமஸ்காரங்களின், மனிதர்களின், வாயு மண்டலத்தின் பந்தனம் உள்ளது . . . என்று சில குழந்தைகள் கூறுகின்றனர். ஆனால், காரணம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், என்னவாக இருந்தாலும், தீவிரமான முயற்சியாளர் அனைத்து விசயங்களிலும் ஒன்றுமே நடக்காதது போல் கடந்துவிடுவார்கள். அவர்கள் சதா மனோ ரஞ்சனத்தை அனுபவம் செய்வார்கள். அப்படிப்பட்ட ஸ்திதியை பறக்கும் கலை என்று சொல்லப்படுகிறது, மேலும், பறக்கும் கலையின் அடையாளம் டபுள் லைட் ஆகும். அவர்களுக்கு எந்தவிதமான சுமையும் கலக்கத்தை ஏற்படுத்த முடியாது.

சுலோகன்: ஒவ்வொரு குணம் மற்றும் ஞானத்தின் விசயத்தை தன்னுடைய உண்மையான சமஸ்காரமாக ஆக்குங்கள்.